# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.91/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | முத்துகுமார் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of January 2021.

நான் நாச்சான்குளத்தில வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தம்பி. ஆஜர் ஆகியுள்ள 2-ம் எதிரி என்னுடைய சித்தப்பா மகன். வழக்கின் மற்ற எதிரிகளும் என்னுடைய சித்தப்பா மகன்கள். 18.01.2015 ம் தேதி மதியத்திற்கு பிறகு அருமைதுரை வீட்டின் முன்பாக தமிழ்செல்வன், பெருமாள், சரவணன், அருமைதுரை, ராஜீவ்காந்தி ஆகியோர்கள் முத்துகிருஷ்ணன் உடன் சண்டை போட்டார்கள். அவர்களுக்குள் ஏற்கனவே சொத்துசம்பந்தமாக பிரச்சனை இருந்தது. முத்துகிருஷ்ணன் டிராக்டரில் வந்து கொண்டிருந்தார் அருமைதுரை வீட்டிற்கு முன்பாக டிராக்டர் நின்று கொண்டிருந்தது அடிபிடி சண்டை போட்டு சத்தம் கேட்டு கொண்டிருந்தது என்னுடைய வீடு அருமைதுரை வீட்டிற்கு எதிர் வீடு சத்தம் கேட்டு நான் ஓடி வந்தேன். அப்போது எதிரிகள் அனைவரும் கையில் கம்பு வைத்து இருந்தார்கள் கம்பால் முத்துகிருஷ்ணனை தோள்பட்டையில் எல்லாரும் சேர்ந்து அடித்தார்கள். எங்களால் விலக்கிவிட முடியவில்லை. என்னுடன் துரைபாண்டி, செல்லதுரை ஆகியோர் சத்தம் போட்டு அவர்களை விலக்கி விட்டோம். முத்துகிருஷ்ணன் ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரண செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்க படுகிறது.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.91/2017 |

| | |
|---|---|
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | **முத்து கிருஷ்ணன்** |

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of January 2021.

நான் நாச்சான்குளத்தில வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் ஆகியுள்ள 2-ம் எதிரி என்னுடைய சித்தப்பா மகன். வழக்கின் மற்ற எதிரிகளும் என்னுடைய சித்தப்பா மகன்கள். கடந்த 18.01.2015ம் தேதி மதியம் 2.00 மணியளவில் நான் தோட்டத்தில் இருந்து டிராக்டர் ஓட்டி வந்தேன் அப்போது அருமைதுரை வீட்டு முன்பாக வந்த போது அருமை துரை, சரவணன், ராஜீவ் காந்தி, ஆறுமுகபெருமாள் மற்றும் தமிழ் செல்வன் ஆகியோர் தெருவில் கல்லை வைத்து அடைத்தார்கள். என்னை அடிப்பதற்காக அவ்வாறு கல்லை வைத்தார்கள். நான் உயிருக்கு பயந்து கல்லின் மீது டிராக்டரை ஏற்றினேன். ராஜீவ் காந்தி புண்டாமவனே, தேவடியாமகனே என கெட்ட வார்த்தைகளால் திட்டி கல்லால் எனது வலது தலையில் அடித்தார். அருமைதுரை என்னுடைய இடது காலைபிடித்து இழுத்தார் காலை பிடித்து இழுத்ததில் நான் கீழே விழுந்தேன் நான் கீழே விழுந்தவுடன் சரவணன், ஆறுமுகபெருமாள், தமிழ்செல்வன் ஆகியோர் உருட்டு கட்டையால் என்னுடைய முதுகிலும், தோள்பட்டையிலும் அடித்தார்கள் நான் சத்தம் போடவும் சத்தம் கேட்டு குமார், துரைபாண்டி, வெள்ளதுரை ஆகியோர் வந்து விலக்கிவிட்டார்கள். இன்றைக்கு தப்பிவிட்டாய் உன் சாவு என் கையில் என சொல்லிவிட்டு அவர்கள் சென்றுவிட்டார்கள் நான் ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். மருத்துவமனையில் வைத்து போலிசார் என்னனை விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கினார்கள். காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைக்கு நேரம் கோரப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்க படுகிறது.